*கவனிக்க*.- *2018.04.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2069 - 2018 අප්‍රේල් මස 27 වැනි සිකුරාදා - 2018.04.27

*2069 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 76 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |

**கவனிக்க**.- (i) காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 09*

*எனது இல. இலி/10/1/129.*

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் சஞ்ஜீவனி ஹேரத் ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்ளைச்சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் 1970 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 09 ஆந் திகதி வழங்கப்பட்டுள் ஆர் 9471 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான காணி உரித்து நிர்ணய திணைக்களம் எனும் முகவரியில் வசிக்கும் மேரி மாடின் பிள்ளை என்பவருக்கு கையளிக்கப்பட்டு புத்தளம் மாவட்டம் பதிவாளர் அலுவலகத்தில் ஆர் 9471 ஆம் இலக்கத்தின் கீழ் 1970 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளதுமான கீழே அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்டரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறியப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப்பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன் . இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.05.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும்.*

**அட்டவனை**

*புத்தளம் நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ள வண்ணாத்திவில்லு பிரதேச செயலாளர் பிரிவின் பொன்பரப்பி பற்றில் வண்ணாத்திவில்லு வடக்கு கிராம அலுவலர் பிரிவில் வீரக்குழிச்சோலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான புத்தளம் நில அவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள நில அவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 4075 ஆம் இலக்க வெளிக்களத்தாளில் புத்தளம் நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட போ.போ.பீ.பீ 22 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் புத்தளம் நில அவையாளரினால் தயாரிக்கப்பட்ட ரேகை வரைதலில் 356 ஆம் இலக்க காணித் துண்டென காட்டப்பட்டதும் 25 ஏக்கர் 06 பர்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான கீழே தரப்பட்டுள்ள எல்லைகளை கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு:-*

*வடக்கில் : துண்டு இலக்கம 333 (பாதை);*
*கிழக்கில் : துண்டு இலக்கம 386 (பாதை);*
*தெற்கில் : பாதை;*
*மேற்கில் : துண்டு இலக்கம் 355.*

*சஞ்ஜீவனி ஹேரத்,*
*பிரதேச செயலாளர்,*
*வண்ணாத்திவில்லு.*

*2018, சனவரி 08.*

*4 - 1014*

---

*பின்னிணைப்பு 9*

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்து செய்வதற்கான (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

*மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பதாம் ஆண்டு மாச்சு மாதம் பதின்மூன்றாம் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/கொத்/பீகொ/பிர/கொ/28 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய தொரகல, பீகொக்ஹில் குடியிருப்பு, இலக்கம் 58 இல், வசிக்கும் மீவன ரணவீரரது ஆரச்சிகே மேரி அனஸ்டீன் பீரிஸ் அவர்களுக்கு வழங்கி, கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத் தில் எல். டீ. ஓ. சி. 5/140ஆம் இலக்கத்தின் கீழ் 1989.11.09 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப் பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2018.05.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.*

**அட்டவணை**

*கண்டி நிருவாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரலேயில் தொரகல கிராம அலுவலர் பிரிவில் புஸ்ஸெல்லாவ இஹலகம என்ற பெயரினைக்கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட வெளிக்களப்பத்திரத்தின் மு. பி.*

மஹ 3382 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நிரல் குறிப்பில் 129 (நூற்று இருபத்தொன்பது) ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.887 ஹெக்டயார்கள் (பூச்சியம் தசம் எட்டு எட்டு ஏழு) விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி: பீகொக்ஹில்

வடக்கு : காணித்துண்டு இல. 128, காணித்துண்டு இல. 126, மற்றும் காணித்துண்டு இல. 125;
கிழக்கு : காணித்துண்டு இல. 125 மற்றும் காணித்துண்டு இல. 7;
தெற்கு : காணித்துண்டு இல. 7 மற்றும் காணித்துண்டு இல. 1;
மேற்கு : காணித்துண்டு இல. 1 மற்றும் காணித்துண்டு இல. 128.

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர், பிரதிக் காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

2018, மாச்சு 08.

4 - 1015/1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கான (104 ஆம் பிரிவு) அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில், உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையிலான) ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து ஆறாம் ஆண்டு செத்தெம்பர் மாதம் இருபத்தொன்பதாம் திகதி வழங்கப் பட்டுள்ள மஹ/ பிர/ 7329 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய கம்பளை அங்கம்மன குடியிருப்பில் வசிக்கும் ரந்திலிகம நந்தூவெதாலாகே சொபியா அவர்களுக்கு வழங்கி, கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல். டீ. ஓ. சி. 4/169 ஆம் இலக்கத்தின் கீழ் 1988, சனவரி 13 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப் பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2018.05.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிருவாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் கந்துகர இஹல கோரலேயில் அங்கம்மன கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கொப்பேவல என்ற பெயரினைக்கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 61/8/3 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தின் மு. பி. மஹ 2695 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் நிரல் குறிப்பில் பதினாறாம் ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.145 ஹெக்ரயார்கள், விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக்கொண்டதுமான அரச காணி: அங்கம்மன

வடக்கு : காணித்துண்டு இல. 17 மற்றும் வீதி;
கிழக்கு : காணித்துண்டு இல. 15;
தெற்கு : வீதி;
மேற்கு : வீதி.

ஆர். ஏ. டீ. ரீ. என். தென்னகோன்,
பிரதேச செயலாளர், பிரதிக் காணி ஆணையாளர்,
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட).

2017, மாச்சு 08.

4 - 1015/2

---

இனைப்பு 09

## காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடைப்பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கான (104 ஆவது பிரிவு) அறிவித்தல்

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் தொலுவ பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் / பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ரீ. ஏ. டீ. டபிள்யூ. தயானந்த ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995, மாச்சு மாதம் 21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்திய/மஹ/ உப/பிர/948 ஆம் இலக்க கொடைப்பத்திரத்தின் உரித்தாளராகிய இல 109/ஈ, கம்பளை வீதி, வெலிகல்ல என்ற முகவரியில் வசிக்கும் வகபேடி கெதர காமினி குணவர்தன அவர்களுக்கு வழங்கி கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல்.டீ.ஓ 12/228 ஆம் இலக்கத்தின் கீழ் 1995, ஓகத்து மாதம் 14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமிள்மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கை யிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆவது பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன். இது

தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2018.05.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தின் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர பஹல பத்துவ கோரளேயில் கொனடுவெல கிராம அலுவலர் பிரிவில் கஹவத்த என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவை அத்தியட்சகரின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 61/8/4 ஆம் இலக்க வெளிக்களப் பத்திரத்தில் / அரசாங்க நிலஅளவையாளரினால் தயாரிக்கப்பட்ட மு.பி.மஹ 3373 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் / நிரல் குறிப்பில் 32 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதும், அளவில் 0.141 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடையதுமான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி புதிய காசல் மில்க் குடியிருப்பு.

வடக்காக : காணித்துண்டு இல 30 மற்றும் 21;
கிழக்கில் : காணித்துண்டு இல 21 மற்றும் 32;
தெற்கில் : காணித்துண்டு இல 60 மற்றும் 61;
மேற்கில் : காணித்துண்டு இல.30.

பிரதேச செயலாளர்/பிரதிக் காணி
ஆணையாளர் (மாகாணங்களுக்கு
இடைப்பட்ட)

2018, பெப்புருவரி 16.

4 - 1015/3

---

இனைப்பு 09

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆவது பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள உடுநுவர பிரதேசச் செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஆகிய ஜீ. கே. ஜீ. ஏ. ஆர். பீ. கே. நந்தன ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதியுத்தமராம் ஜனாதிபதி அவர்களால் 1992.07.03 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மத்யம்/உனு/298 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான களுகமுவ குடியேற்றம் எனும் முகவரியின் வசிக்கும் சேகு லெப்பே அபுசாலி என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO/C/59/811/92 ஆம் இலக்கத்தின் கீழ் 1992.07.24 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணயில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத் தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.05.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தின் உடுநுவர பிரதேச செயலாளர் பிரிவின் கங்க பளாத்த பற்றில் / கோறளையிலுள்ள நிவு அல்ப்பிட்டிய வடக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த எகொட களுகமுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகர் கண்டி என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு பீ.பீ.ஏ.2859 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் /இரேகை வரைதலில் 90 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 30 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு ; காணியின் பெயர்: எகொட களுகமுவ.

வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 88;
கிழக்கில் : பாதை;
தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 91;
மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 89.

ஜீ. கே. ஜீ. ஏ.ஆர். பீ. கே. நந்தன,
பிரதேச செயலாளர்,
உடுநுவர.

2018, மாச்சு 14.

4 - 1015/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.